

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 139 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 14 – திங்கள்கிழமை 29 டிசம்பர் 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 139 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 14 - Monday 29 December 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00


### பல்லடத்தில் இன்று கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில்

# ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ - தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

**பல்லடம், டிச. 29 -**

**பல்லடத்தில் இன்று (29.12.2025) கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ - தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.**

இதுகுறித்து தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-



1.31 கோடி மகளிருக்கு ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’, ‘விடியல் கட்டணமில்லா பேருந்துப் பயணம்’, கல்வி கற்கும் மாணவிகளுக்கு ‘புதுமைப் பெண் திட்டம்’, வேலைக்குச் செல்லும் மகளிருக்கு பாதுகாப்பான ‘தோழி விடுதி’, இந்தியாவிலேயே அதிக அளவாக 43 சதவீதம் வேலைக்குப் போகும் பெண்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதற்கான சூழல் என மகளிர் மேம்பாட்டுக்காக தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில்;

கழகப் பொதுச்செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் - அமைச்சர் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, திருச்சி சிவா, எம்.பி., ஆ.இராசா, எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், எம்.பி., அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக மகளிர் அணிச் செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் முன்னிலையில் கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி, எம்.எல்.ஏ. வரவேற்பில்;

இன்று (29.12.2025 - திங்கட்கிழமை), மாலை 4.00 மணி அளவில்,



திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில், “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் மாநாடு நடைபெறுகிறது.

இம்மாநாட்டினை அமைச்சர் பெருமக்களான சு.முத்துசாமி, மா.மதிவேந்தன், கயல்விழி செல்வராஜ், மற்றும் அரசுக் கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்டச் செயலாளர்கள்/பொறுப்பாளர்களான மேயர் என்.தினேஷ்குமார், என்.நல்லசிவம், தோப்பு வெங்கடாசலம், தொ.அ.ரவி, தளபதி முருகேசன், துரை செந்தமிழ்ச்செல்வன், கே.எம்.ராஜு, கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், எம்.பி., கே.எஸ்.மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஈஸ்வரசாமி, கே.இ. பிரகாஷ், கணபதி ப.இராஜ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி.வெங்கடாசலம், பெ.இராமலிங்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, இரா.மாணிக்கம் ஆகியோர் ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்துள்ளனர்.

நிறைவாக, திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர் திருப்பூர் க.செல்வராஜ், எம்.எல்.ஏ., நன்றியுரையாற்றுகிறார்.

இவ்வாறு தலைமைக் கழக அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

### ஒன்றிய பா.ஜ.க.வின் கொடுங்கோல் ஆட்சியாளர்களும் – கூஜா தூக்கும் அ.தி.மு.க. அடிமைகளும்

# கழக அரசின் சாதனைகளை மறைக்க முடியாமல் திண்டாடுகிறார்கள்!

## திருவண்ணாமலை – அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**திருவண்ணாமலை, டிச. 29 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.12.2025) திருவண்ணாமலை மாவட்டம், மலப்பாம்பாடி, கலைஞர் திடலில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி உரையாற்றுகையில், “ஒன்றிய பா.ஜ.க.வின் கொடுங்கோல் ஆட்சியாளர்களும், கூஜா தூக்கும் அ.தி.மு.க.வின் அடிமைகளும் கழக அரசின் சாதனைகளை மறைக்கவும், மறுக்கவும் முடியாமல் திண்டாடுகிறார்கள்” என்று குறிப்பிட்டார்.**

இவ்விழாவில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

ஆர்வத்துடன் திரண்டிருக்கின்ற உங்களையெல்லாம் பார்க்கும்போது, எனக்குள்ளே ஒரு புது ‘எனர்ஜி’ பிறக்கின்றது. திருவண்ணாமலை என்று சொன்னதும், ஜவ்வாதுமலை போன்ற எழில் கொஞ்சும் மலைகளின் அழகை ரசிக்கிறதா! இல்லை, உங்கள் முகத்தில் தெரிகின்ற மகிழ்ச்சியை ரசிக்கிறதா! என்று தெரியாமல் உங்கள் முன்பு நின்று கொண்டிருக்கிறேன்.

### ஏராளமான பெருமைகள் கொண்ட திருவண்ணாமலை மாவட்டம்!

ஆன்மீகத்தில் ஒளி வீசி, தமிழ்நாட்டிலேயே மிக உயர்ந்த 217 அடி ராய கோபுரம் கொண்டு, ஆன்மீக அன்பர்களையும் ஈர்க்கின்ற இடம், இந்தத் திருவண்ணாமலை!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.12.2025) திருவண்ணாமலை மாவட்டம், மலப்பாம்பாடி, கலைஞர் திடலில் நடைபெற்ற அரசு விழாவில், 631 கோடியே 48 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவிலான 314 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 63 கோடியே 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 46 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இவ்விழாவில், அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஓ.ஜோதி, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், மேயர் திருமதி வி.நிர்மலா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கற்கால மனிதர்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் பாறை ஓவியங்கள் கருவிகள், தொல்லியல் அகழாய்வில் முத்திரை பதிக்கும் கீழ் நமண்டி என்று நம்முடைய வரலாற்றுச் சுவடும் நிறைந்து இருக்கின்ற இந்த மாவட்டத்திற்கு ஆரணி அரிசி, ஆரணி பட்டு, படவேடு வாழை, மொடையூர் சிற்பங்கள் என்று ஏராளமான பெருமைகள் இருக்கின்றது!

### பெருமைகளுக்குப் புகழ்சேர்த்து புதுவளர்ச்சி காணுவோம்!

அதுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, முதல் நாடாளுமன்ற உறுப்பினரை அளித்த வரலாற்றுப் பெருமையும் இந்த மண்ணிற்கு உண்டு! இந்தப் பெருமைகளுக்குப் புகழ் சேர்த்து, புது வளர்ச்சியை ஏற்படுத்துவதற்குதான், நம்முடைய திராவிட மாடல் அரசு பணியாற்றிக் கொண்டிருக்கிறது!

### எதிலும் வல்லவர் அமைச்சர் எ.வ.வேலு!

கடந்த 14ஆம் தேதிதான், இதே திருவண்ணாமலைக்கு வந்து, இதே இடத்தில், எழுச்சிமிகு தி.மு.க. இளைஞரணியின் மாநாட்டில் பங்கேற்றேன். இரண்டு வாரத்திற்குள், மீண்டும் திருவண்ணாமலைக்கு வந்து, உங்கள் எல்லோருடனும் பேசுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது!

இந்த வாய்ப்பின் மூலமாக, 631 கோடியே 48 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவிலான, 314 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, 63 கோடியே 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 46 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 2 இலட்சத்து 66 ஆயிரத்து 194 பேருக்கு ஆயிரத்து 400 கோடியே 57 இலட்சம் ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளை வழங்குகின்ற விழாவாக ஏற்பாடு செய்திருக்கிறார், எதிலும் வல்லவரான நம்முடைய அமைச்சர் எ.வ.வேலு அவர்கள்!

### நமது அரசுக்கு காலத்தால் அழியாத புகழ் சேர்ப்பவர் அமைச்சர் எ.வ.வேலு!

புதுமையும் - கலைநயமும் - பிரமாண்டமும் நிறைந்த கட்டடங்களை உருவாக்கி, காலத்தால் அழியாத புகழை நம்முடைய அரசுக்கு சேர்த்துக் கொண்டிருப்பவர் தான் நம்முடைய எ.வ.வேலு அவர்கள்! அவருக்குத் துணையாக நின்று, திருவண்ணாமலையை எல்லோரும் அண்ணாந்து பார்க்கின்ற மலையாக வளர்த்தெடுக்கின்ற தமிழ் ஆர்வலர், மாவட்ட ஆட்சியர் தர்ப்பகராஜ் அவர்களுக்கும், மாவட்ட அரசு அலுவலர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

2025ஆம் ஆண்டு நிறைவடையக்கூடிய நேரத்தில் உங்கள் எல்லோரையும் சந்திக்க வந்திருக்கிறேன். நிறைவான பல திட்டங்களைச் செய்திருக்கிறோம் என்ற அந்த உணர்வுடன் வந்திருக்கிறேன்!

### நான்கரை ஆண்டுகளில் நாடே போற்றும் ஏராளமான திட்டங்கள்!

நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்து நான்கரை ஆண்டுகள் ஆகிறது... இந்த நான்கரை ஆண்டுகளில், நாடே போற்றும் ஏராளமான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்! நம்முடைய ஆட்சியின் ஒவ்வொரு திட்டமும், தமிழ்நாட்டில், ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று சேரவேண்டும் என்று கவனமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்!

**தொடர்ச்சி 3ஆம் பக்கம்**